**செய்தி வெளியீடு எண்:598** **நாள் :24.11.2014**

**<u>1727 சிறப்புப் பிரிவு உதவி மருத்துவப் பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் அறிவிப்பு</u>**

..

2012–ஆம் ஆண்டில், நாட்டிலேயே முதன் முறையாக, மருத்துவப் பணியாளர்களை தேர்வு செய்ய, முதன் முறையாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தால் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் இதுவரை 4461 மருத்துவர் மற்றும் இதர பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. குறிப்பாக, 2013–14–ஆம் ஆண்டில் 2726 உதவி மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. 2014–15 ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள 2176 உதவி மருத்துவ அலுவலர்களின் காலிப் பணியிடங்களை நிரப்ப மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் 12.10.2014 அன்று தேர்வு நடத்தி மருத்துவர்களை நிரப்ப நடவடிக்கை எடுத்து வருகிறது.

அரசு மருத்துவ நிலையங்களில், 36 சிறப்புப் பிரிவுகளில் காலியாகவுள்ள 1727 உதவி மருத்துவர் (Assistant Surgeon speciality in 36 specialities) பணியிடங்களை விரைவாக நிரப்ப ஏதுவாக 'வாக்–இன்' (Walk-in selection process) தேர்வு முறை என்ற எளிய முறையில் சிறப்புப் பிரிவு பணியிடங்களை நிரப்ப அரசு முடிவு செய்து அதன் தொடர்ச்சியாக, மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் 1727 சிறப்புப் பிரிவு உதவி மருத்துவர்களை நியமிக்க 9.11.2014 அன்று விரிவான அறிவிப்பினை www.mrb.tn.gov.in இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. இப்பணியிடங்களுக்காக விண்ணப்பிக்க விரும்புவோர், 1.12.2014 வரை மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய இணையதளத்தில் (www.mrb.tn.gov.in) ஆன்–லைன் (on-line application) மூலம் விண்ணப்பிக்கலாம். தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு, நடைமுறையிலுள்ள இட ஒதுக்கீடு விதி முறைகளுக்குட்பட்டு 'வாக் இன்' (Walk-in selection process) தேர்வு முறையின் மூலம் காலியாக உள்ள இடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தகுதியுள்ள மருத்துவர்கள் அனைவரும் 1.12.2014–க்குள் விண்ணப்பிக்க கோரப்படுகிறார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**